# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 24 வியாழக்கிழமை 09.05.2024 கதிர் 252



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel




# நாட்டின் முன்னேற்றத்திற்கு பொது உடன்பாடு அவசியம்!
## நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விசேட உரை

ஒற்றுமை, பொது உடன்பாட்டுடன் முன்னோக்கிச் சென்றால், இலங்கையை உலகில் அபிவிருத்தியடைந்த நாடாக விரைவில் உயர்த்த முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நாட்டுக்கான பொது உடன்பாட்டின் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

நாட்டின் எதிர்கால சந்ததியினருக்குக் கிடைத்திருக்கும் வாய்ப்பை நழுவ விட வேண்டாம் எனக் கேட்டுக்கொண்ட ஜனாதிபதி, இந்த இக்கட்டான நேரத்தில் நாட்டை விட்டு தனிப்பட்ட இலட்சியங்களைக் கருத்தில் கொண்டு செயற்படுவது மாபெரும் அழிவின் ஆரம்பமாக அமையும் என்றும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையிலேயே இதனைத் தெரிவித்தார்.

இன்று நாம் எவ்வாறு செயற்படுகின்றோம் என்பதைப் பொருத்தே எமது எதிர்காலம் தீர்மானிக்கப்படும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அன்று தம்மை நாட்டுக்குத் துரோகம் செய்தவர்களாக முத்திரை குத்திக்கொள்ள போகின்றார்களா அல்லது நாட்டின் மீது அன்பு கொண்டவர்கள் என்ற அடையாளத்தை பெறப் போகின்றார்களா என்பதை தீர்மானிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் மாத்திரமின்றி, மதத் தலைவர்கள், தொழிற்சங்கங்கள், வர்த்தக சமூகம், அரச சார்பற்ற அமைப்புகள், வெவ்வேறான சிந்தனைகளை கொண்ட தலைவர்கள், சமூகத்தில் தாக்கம் செலுத்தக்கூடியவர்கள் உள்ளிட்ட சகலரும் பொது உடன்பாட்டுடன் இணைந்துகொள்ள வேண்டியது அவசியம் என்பதையும் ஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் இன்று ஆற்றிய முழுமையான உரை வருமாறு -

“நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பணியை நான் பொறுப்பேற்றப் பின்னர், பொருளாதாரத்தின் உண்மையான நிலை குறித்த அனைத்துத் தகவல்களையும் அவ்வப்போது இச்சபையில் கூறியுள்ளேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக முன்னெடுத்த பொருளாதார திட்டங்களையும் எதிர்காலப் பொருளாதாரத் திட்டங்கள் குறித்த உண்மைகளையும் கூறினேன்.



பற்றி எரிந்துகொண்டிருந்த நாட்டையே நான் பொறுப்பேற்றேன். நாடு நரகமாக மாறியிருந்தது. பொருளாதாரம் முடங்கிக் கிடந்தது. பணவீக்கம் 70 சதவீதமாக உயர்ந்திருந்தது.

மொத்த தேசிய உற்பத்தியில் 10-12 சதவீதத்திற்கும் அதிகமாக வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை அதிகரித்திருந்தது. வட்டி வீதம் 30 சதவீதமாக உயர்ந்திருந்தது. டொலரின் பெறுமதி சுமார் 450 ஷரூபா வரையில் அதிகரித்திருந்தது. அந்நியச் செலாவணி கையிருப்பு பூஜ்ஜியமாகிப் போனது.

ஒரு வாரத்துக்குக் கூட உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்ய பணம் இருக்கவில்லை. நாட்டில் பெரும்பகுதியானோர் வீதிகளில் இறங்கினர். பல நாட்களாக மக்கள் வரிசையில் நின்றனர். பல எதிர்ப்பு போராட்டங்களில் பங்கெடுத்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் நாட்டையும் பொருளாதாரத்தையும் மீளக் கட்டியெழுப்பும் சவாலை நான் ஏற்றுக்கொண்டேன். அந்த நேரத்தில் நாட்டைக் காப்பாற்றும் சவாலை ஏற்க எவரும் முன்வரவில்லை. பல்வேறு நிபந்தனைகளை முன்வைத்தனர். ஆனால் நான் நிபந்தனையின்றி நாட்டை பொறுப்பேற்றுக்கொண்டேன். நாடாளுமன்றத்தில் எனது கட்சிக்கு ஒரேயொரு ஆசனம் மட்டுமே இருந்தது.

8 ►

# கொழும்பில் மாத்திரம் 11 லட்சத்திற்கும் மேற்பட்ட போதைப்பொருள் அடிமையாளர்கள் உள்ளனர்!
## பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவிப்பு

போதைப்பொருள் விநியோக வலையமைப்புகளை உடைத்து போதைக்கு அடிமையானவர்களை விடுவிக்கும் புதியதோர் புனர்வாழ்வு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக கொழும்பில் நேற்று (08) நடைபெற்ற புனர்வாழ்வளித்தல் நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றதுடன், அதன் கீழ் கொழும்பு மாவட்டத்தில் 11 புனர்வாழ்வு நிலையங்களும் நாடளாவிய ரீதியில் 256 புனர்வாழ்வு நிலையங்களும் நிறுவப்பட உள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

இங்கு மேலும் தெரிவித்த பொலிஸ்மா அதிபர் “போதை பழக்கத்திற்கு அடிமையானவர்கள்



காலையில் எழுந்ததும் உண்ண உணவு கேட்பதில்லை, போதைப் பொருள் பக்கெட்டைத்தான் கேட்பார்கள். கொழும்பு நகரில் மாத்திரம் 11 லட்சத்து 5 ஆயிரத்து 608 பேர் போதைப் பழக்கத்திற்கு அடிமையாகி உள்ளனர். இவர்கள் சகலவிதமான 2 ►

# கடந்த புத்தாண்டுக் காலத்தில் மதுப் பாவனை வீழ்ச்சியடைவு!

இம்முறை புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது ஏனைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் மது அருந்தியோரின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைந்திருந்ததாக மது மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கி 415 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இந்த உண்மைகள் தெரியவந்துள்ளதாக மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, மேற்படி கணக்கெடுப்பில் கலந்து கொண்டவர்களின் கருத்தின் படி 64மூ பேர் மற்ற ஆண்டுகளை விட இம்முறை பண்டிகை காலத்தில் தாம் மது அருந்தியதை குறைத்ததாக தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக இந்த ஆய்வில் பங்கேற்றவர்களில் 71.5 வீதம் பேர் இம்முறை மதுவின் விலை அதிகமாக இருந்த காரணத்தினாலேயே மது அருந்துவதைக் குறைத்ததாகக் குறிப்பிட்டுள்ளனர். (ரெம-38)

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதிகள் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வ அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன்படி ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கும், ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அரசியலமைப்பு மற்றும் 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதித் தெரிவு விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் வேட்புமனுக்கள் கோரப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக் குழுவின் தவிசாளர் ஆர். எம்.ஏ.எல். ரத்நாயக்கவின் கையொப்பத்துடன் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (அ, 04)

# டயனா வெளிநாடு செல்லத் தடை

நாடாளுமன்ற உறுப்புரிமையை இழந்துள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவுக்கு வெளிநாடு செல்ல நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.



முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவுக்கு இலங்கை நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த சட்ட ரீதியில் அங்கீகாரம் கிடையாது என உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்திருந்த நிலையிலேயே, கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

இதேவேளை, டயனா எம்.பி. பதவியை இழந்ததால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு முஜிபுர் ரஹ்மானை ஐக்கிய மக்கள் சக்தி நியமித்துள்ளது. (அ)

# புத்தளம் வைத்தியசாலையின் உட்புற சுவர்களில் ஓவியங்கள் வரையப்பட்டன



(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

நோயாளர்களாக வருகை தரும் சிறார்களின் மகிழ்ச்சியினை கருத்தில் கொண்டு புத்தளம் ஆதார வைத்தியசாலையின் உட்புற சுவற்றில் அழகிய வர்ண ஓவியங்கள் வரைந்து வழங்கப்பட்டுள்ளன.

புத்தளம் ஆதார வைத்தியசாலையின் சிறுவர் வார்ட்டுக்கு பொறுப்பான டொக்டர் சுஜித் மற்றும் டொக்டர் சனூசியா ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்த ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

சமூக ஆர்வலர் முஹம்மட் சாமிலின் முயற்சியினால் புத்தளம் வலய கல்வி பணிமனையின் சித்திரப்பாட ஆசிரிய ஆலோசகர் கலாநிதி எம்.எம்.முஹம்மது மற்றும் அவரது மாணவர் அஷ்ஷெய்க் முஹம்மது ஜப்ரீஸ் ஆகியோரது ஒத்துழைப்போடும் புத்தளம் நகர சபையின் முன்னாள் உறுப்பினர், முன்னாள் நகர சபை உறுப்பினர் ரனீஸ் பதியுதீனின் பங்குபற்றுதலோடும் இந்த ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

# வாளால் வெட்டி ஒருவர் கொலை

காலியில் வீடு புகுந்து வன்முறைக் கும்பல் மேற்கொண்ட வாள்வெட்டுத் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

தொட்டகொட, குருந்தகந்த பிரதேசத்தைச் சேர்ந்த ஹிச்சிமல்லி என்றழைக்கப்படும் 43 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தபோது வாள் வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் என்று அக்மீமன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் தகராறு காரணமாக நேற்றிரவு இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்தவரின் மூத்த சகோதரனும் வாள்வெட்டுக்கு இலக்காகிக் காயமடைந்த நிலையில் காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ள அக்மீமன பொலிஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

### கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போதைப் பொருட்களுக்கும் அடிமையானவர்கள் ஆவர். இவர்களால் தான் கொழும்பில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. அதனாலேயே போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்கள் கொழும்பில் அதிக போதைப் பொருட்களை விற்பனை செய்ய முயற்சிக்கின்றனர். இதற்கெதிராக நாம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

போதை பழக்கத்திற்கு அடிமையானவர்களை அதிலிருந்து விடுவிப்பதுடன் எதிர்காலத்தில் போதைப்பொருள்பாவனைக்கு ஆளாகக்கூடியவர்களை தடுத்து நிறுத்தவும் வேண்டியுள்ளது. இந்த இரண்டு நடவடிக்கைகளிலும் இலங்கை பொலிஸார் ஈடுபட்டுள்ளனர், இதன் பெறுபேறுகள் எதிர்காலத்தில் தெரியவரும்" என்றார்.

(ரெம-37)

# அதிக சம்பளம் தருவதாகக் கூறி நேர்முக தேர்வுக்கு அழைக்கப்பட்ட யுவதி மீது பாலியல் துஷ்பிரயோகம்

அதிக சம்பளத்துடன் நிறைவேற்று அதிகாரப் பதவியொன்றை வழங்குவதாக உறுதியளித்து நேர்முக தேர்விற்கு வரவழைக்கப்பட்ட திருமணமான யுவதியொருவரை பாரிய பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக கூறப்படும் கோடீஸ்வர வர்த்தகர் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக கொள்ளுப்பிட்டி பொலிஸார் நேற்று (08) கோட்டை நீதவான் கோசல சேனாதீரவிடம் அறிவித்துள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணைக்கு தேவையான தொலைபேசி அழைப்புகள் உட்பட இதர விபரங்களை விசாரணை அதிகாரிகளுக்கு வழங்குமாறு தொலைபேசி நிறுவனங்களுக்கு கோட்டை நீதவான் உத்தரவிட்டுள்ளார். குறித்த யுவதியுடனான தொடர்பை வட்ஸ்அப் மூலமே இந்த கோடீஸ்வர வர்த்தகர் ஏற்படுத்தியிருந்ததாகவும், நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதையடுத்து யுவதி தனது கணவருடன் கொள்ளுப்பிட்டியில் உள்ள சொகுசு அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றிற்கு சென்றுள்ளதாகவும் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்திருந்தனர்.

அதன்போது கணவரை கீழ்மாடியில் இருக்குமாறு பணிக்கப்பட்டதுடன், யுவதியை மாடியிலுள்ள அறைக்கு அழைத்துச் சென்று மேற்படி கோடீஸ்வர நபர் குற்றம் இழைத்துள்ளதாகவும் பொலிஸார் தரப்பில் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(ரெம-40)

# வாகன இறக்குமதி தொடர்பாக விரைவில் அறிக்கை சமர்ப்பிப்பு

### அமைச்சர் தகவல் வெளியிட்டார்

வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்குவது மற்றும் அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகள்தொடர்பிலான விசேட அறிக்கையை துறைசார் நிபுணர்கள் தமக்கு விரைவில் வழங்க உள்ளதாகவும், இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத்தளர்த்துவது தொடர்பிலான விரிவான தகவல்கள் அதில் உள்ளடக்கப்படும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்திற்கும் அமைச்சருக்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்று அவர் நிதியமைச்சில் இடம்பெற்ற போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்

இறக்குமதித் துறை நிபுணர்களால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கை வாகன இறக்குமதியைமீள ஆரம்பிப்பதில்குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(04)

# மொட்டுவின் கோரிக்கையை அடியோடு நிராகரித்த ரணில்

நாடாளுமன்றத்தை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கலைத்துப் பொதுத்தேர்தலுக்குச் செல்லுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார் என அறியமுடிகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதன்போது மேற்படி யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

அரசமைப்பின் பிரகாரம் முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் முடிவிலேயே ஜனாதிபதி இருக்கின்றார் எனவும் கூறப்படுகின்றது.

(அ)

# மகாவலி கங்கையில் மூழ்கி ஒருவர் மரணம்

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வராதென்ன பகுதியில் மகாவலி கங்கையில் மூழ்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது என்று கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டி, யடஹலகல பிரதேசத்தைச் சேர்ந்த 66 வயது நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் தனது நண்பருடன் மகாவலி கங்கையில் நீராடிக் கொண்டிருக்கும்போது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வு நடைபவனி யாழ்ப்பாணத்தில்





விதிப்பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் வேம்படிச் சந்தியிலிருந்து யாழ் போதனா வைத்தியசாலை வீதியூடாக காங்கேசந்துறை வீதி சத்திரச் சந்தி வரை வீதிப்பாதுகாப்பு விழிப்புணர்வு நடைபவனி இடம்பெற்றது. வீதியில் இடர்பாடுகளுடைய இடங்களை அடையாளங்காணல், வீதிப் பாதுகாப்பு மற்றும் வாகன நடைமுறைகளைப் பின்பற்றல், பரிசோதனை போன்ற செயற்பாடுகள் இதன்போது நடைபெற்றன.

குறித்த செயற்பாட்டை, தொடர்ச்சியாக ஏனைய பகுதிகளில் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், யாழ்ப்பாண மாவட்ட பதில் செயலாளர், வடக்கு மாகாண மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர், மோட்டார் வாகனப் பரீட்சகர்கள், அதிகாரிகள், யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், போக்குவரத்துப் பொலிஸார், வைத்தியர்கள், மாநகர சபை ஆணையாளர் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (O1)

## பெண் ஆளுமை சம்மாந்துறை மஷ்ஹூறா கண்டியில் விருது வழங்கி கௌரவிப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

பெண் ஆளுமைகளுக்கான கனேடிய விழித்தெழு சர்வதேச அமைப்பின் "சர்வதேச விழித்தெழு பெண்ணே!" விருது வழங்கும் நிகழ்வு கண்டியில் அண்மையில் நடைபெற்றது.

சம்மாந்துறை ஆசிரியையும் எழுத்தாளரும் ஶ்ரீலங்கா பென் கிளப் ஸ்தாபகருமான சித்தி மஷ்ஹூறா சு/ஹர்தீன், கனேடிய உயர் ஸ்தானிகர் எரிக் வோல்ஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட நிகழ்வில் பாராட்டி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி ராதாகிருஷ்ணனுடன் பல உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.






## ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் நியமனம்

(வி.ரி.சகாதேவராஜா)

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளராக இலங்கை நிர்வாக சேவை அதிகாரி இராசரத்தினம் திரவியராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் இன்று தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவர் முன்னதாக வெல்லாவெளி, நிந்தவூர், அம்பாறை போன்ற பிரதேசங்களில் கடமையாற்றி பொத்துவில் பிரதேச செயலாளராகவும் சேவையாற்றி இருந்தார் .

அதன் பின்னர் ஆட்பதிவுத் திணைக்களப் பிரதி ஆணையாளராக கிழக்கில் பணியாற்றி வந்த வேளையில், தற்போது ஆலையடிவேம்பு பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

# சுகாதாரப் பணியாளர்களின் ஓய்வுபெறும் வயது 61 அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது!

## அமைச்சர் ரமேஷ் பத்திரன தகவல்



நாட்டில் தாதியர் மற்றும் ஏனைய சுகாதாரப் பணியாளர்களின் ஓய்வுபெறும் வயது 61 ஆக அதிகரிக்கப்படும் என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் காமினி வலே பொட எம்.பி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே சுகாதார அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார்.

தாதியர்களின் ஓய்வுபெறும் வயதை 61 வயதிற்கு மேல் நீடிக்குமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் அவ்வாறான நீடிப்பு வழங்கப்படமாட்டாது, என சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஓய்வுபெறும் வயதை 61 ஆக அதிகரிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பத்திரன தெரிவித்தார்.

இதேவேளை, சுகாதாரச் சேவைகளுக்குப் புதிதாக 3,000 தாதியர்களை இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், தற்போதுள்ள 1,000 வெற்றிடங்களை நிரப்பவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். (04)

# மதவாச்சி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இளைஞர் மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவம்

## மே 15 வரை விளக்கமறியலில் வைப்பு!

மதவாச்சியில் 23 வயதான இளைஞர் ஒருவரின் மர்ம உறுப்பு பாதிக்கப்படும் அளவிற்கு தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மதவாச்சி பொலிஸ் நிலைய ஊழல் தடுப்புப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான வழக்கு மதவாச்சி நீதவான் நிமேஷா தர்மதாஸ முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் மூவர் கைது செய்யப்படவுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நேற்று நீதிமன்றத்திற்கு அறிவித்தது.

சந்தேகநபரான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, எதிர்வரும் 15 ஆம் திகதி அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்படவுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மதவாச்சி பொலிஸ்நிலைய வாகனப்போக்குவரத்துப்பிரிவில் சேவையாற்றிய பொலிஸ் சார்ஜன்ட்கள் இருவரை ஏதேனும் நிபந்தனையின் அடிப்படையில் பிணையில் விடுவிக்குமாறு அவர்கள் சார்பில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணிகள் நேற்று நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தனர்.

இந்தக் கோரிக்கையை நிராகரித்த நீதவான், குறித்த இருவரையும் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# குஷ் போதைப்பொருளை இலங்கைக்குக் கொண்டுவர முயற்சித்த நபர் ஒருவர் கட்டுநாயக்கவில் கைதானார்!

## இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியாம்



சுமார் இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதி கொண்ட குஷ் போதைப்பொருளை இலங்கைக்குக் கொண்டு வர முயற்சித்த நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையப் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகளால் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஹோமாகம பிரதேசத்தை சேர்ந்த 32 வயதுடையவர் என்பதுடன் அவர் தாய்லாந்தின் பாங்கொக் நகரில் இருந்து இலங்கை வந்துள்ளார் எனவும் தெரியவருகிறது.



# மூதூரில் சுகாதார நிலையம் இன்று திறந்து வைக்கப்பட்டது

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பெரிய பாலம் பகுதியில் புதிதாக நிருமாணிக்கப்பட்ட கிராமிய சுகாதார நிலையம் இன்று திறந்து வைக்கப்பட்டது .

குறித்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு புதிய கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஹில்மி முகைதீன் பாவா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அதுகோரள, மாகாண சுகாதார பணிப்பாளர் டொக்டர் டி ஜி.எம். கொஸ்தா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# இலங்கை மகளிர் கபடி அணியில் யாழ் வீராங்கனை பிரியவர்ணா



கரவெட்டி மாலை சந்தை மைக்கல் விளையாட்டுக்கழக வீராங்கனை பிரியவர்ணா நேபாளத்தில் நடைபெறவுள்ள கபடி போட்டிகளில் இலங்கை அணிக்காக விளையாடப் பயணமாகவுள்ளார்.

கரவெட்டிப் பிரதேசத்தில் உள்ள மாலை சந்தை மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வீராங்கனையும், தேசிய கபடி அணித் தெரிவில் யாழ் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்பவரும் இலங்கைக் கடற்படை அணி வீராங்கனையுமான பிரியவர்ணா, நேபாளத்தில் நடைபெறவுள்ள கபடிப் போட்டிகளில் விளையாடுவதற்கான இலங்கை அணிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யா.நெல்லியடி மத்திய கல்லூரி மற்றும் மாலை சந்தை மைக்கல் விளையாட்டுக்கழகத்திற்காக மாவட்டம், மாகாணம், தேசிய ரீதியான போட்டிகளில் தொடர்ச்சியாகத் திறமையை வெளிப்படுத்திய அவருக்கு இந்த வாய்ப்புக் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாவற்குழிப்பகுதியில் யுக்திய சோதனை



யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழிப் பிரதேசத்தில் இன்று வியாழக்கிழமை காலை யுக்திய சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து ஏ9 மற்றும் ஏ32 வீதிகள் ஊடாகப் பயணித்த வாகனங்களை மறித்துச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். (01)

# உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பணம் இல்லை என்ற அரசாங்கம் அபிவிருத்திப் பணிக்குப் பெருமளவு பணத்தை ஒதுக்கியுள்ளது!

## தேர்தலை இலக்காகக் கொண்ட செயல் இது என்கிறார் தயாசிறி எம்.பி.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த பணமில்லை என்று கூறிய அரசாங்கம் தற்போது 15 பில்லியன் ரூபாவை அபிவிருத்தித் திட்டங்களுக்கு வழங்க ஏற்பாடு செய்துள்ளதாக குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று (07) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இவ்வாறு அபிவிருத்தி எனும் பெயரில் பணம் வழங்குவதானது கலைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைகளை தமக்கேற்ப மீண்டும் செயற்படச் செய்யும் நடவடிக்கையாகவே அமையும் என அவர் குற்றம் சாட்டினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில் "இந்த வருடத்திற்கான பணிகளை அடுத்த ஏழு மாதங்களுள் முடிக்கும் வகையில் புதிய திட்டமொன்று கொண்டுவரப்பட்டது. ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து இவை செய்யப்படுகின்றன. பரவலாக்கப்பட்ட நிதியிலிருந்து எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கு ஐந்து சதம் கூட வழங்கப்படவில்லை. மலையக அபிவிருத்தி குறித்தும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இவர்களின் நோக்கம் என்னவென்றால், உள்ளூராட்சி சபைகளை மீண்டும் செயல்படச் செய்து முன்னாள் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் பிற அரசாங்க அதிகாரிகளுக்கு தொழிற்பட வாய்ப்பை வழங்குவதாகும். அதன்படி ஒவ்வொரு உள்ளூராட்சி சபைக்கும் 3.4 பில்லியன் வழங்கப்படவுள்ளது. அவர்கள் பரவலாக்கப்பட்ட நிதியிலிருந்து ஏழு மாதங்களில் ரூ.15 பில்லியனை செலவு செய்யப் போகின்றனர்.

உள்ளூராட்சி தேர்தலை நடத்த அரசிடம் பணமில்லை என்றனர். இப்போது அந்த நிறுவனங்கள் 15 பில்லியன் மதிப்பிலான அபிவிருத்தி பணிகளை செய்கின்றன. தேர்தலை நோக்கிய இந்த செயற்பாடு தவறானதாகும். உள்ளூராட்சி தேர்தலை முறைப்படி நடத்துங்கள்" என்றார்.

(ரெம-34)

# சுகாதார அமைச்சில் பல கோடி ரூபா மதிப்புள்ள மயக்க மருந்து உபகரணங்கள் பழுதடைந்த நிலையில் கிடப்பில் உள்ளனவாம்

சுகாதார அமைச்சில் பல கோடி ரூபா பெறுமதியான மயக்க மருந்து உபகரணத் தொகுதிகள் பழுதடைந்த நிலையில் இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

மருத்துவமனை கட்டமைப்பின் தேவைக்கும் அதிகமாக தனிப்பட்ட லாபம் கருதியே மேற்படி சத்திர சிகிச்சை உபகரணங்கள், மயக்க மருந்து உபகரணங்கள் உட்பட இன்னும் சில கருவிகளும் பரவலாக்கப்பட்ட நிதி விதிமுறைகளுக்கு மாறாக கொள்முதல் செய்யப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக அத்தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களை வைத்தியசாலைகளின் கொள்ளளவிற்கு மீறியதாகவும், உபகரணங்களை ஏற்றுக்கொள்ள எவரும் முன்வராத காரணத்தினாலுமே சுகாதார அமைச்சின் வளாகத்தில் அவை பழுதடைந்த நிலையை அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து, அமைச்சின் செயலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், இவை குறித்தான விசாரணைகள் திருப்திகரமாக இல்லை என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான மருத்துவர்கள் சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ரெம-35)







## 15 முதலீட்டு நிறுவனங்கள் தொடர்பில் புகார்கள்! மத்திய வங்கி ஆதாரங்களைச் சேகரிக்கின்றது




பயிர்ச்செய்கை முதலீடு தொடர்பிலான 15 நிறுவனங்கள் குறித்து இலங்கை மத்திய வங்கிக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் வங்கி அல்லாத நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் பணிப்பாளர் சனுரி ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போது கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில், குறித்த நிறுவனங்கள் பொது மக்களிடமிருந்து பண வைப்புகளை பெற்றுள்ளனவா எனவும், அதற்கான ஆதாரங்களை சேகரிக்கும் பணியில் மத்திய வங்கி ஈடுபட்டுள்ளது எனவும் அந்த நிறுவனங்கள் தொடர்பான குற்றச்சாட்டு நிஷரூபிக்கப்பட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மத்திய வங்கியின் ஆளுனர் கலாநிதி நந்தலால் வீரசிங்ஹ இது தொடர்பில் தெரிவிக்கையில், மத்திய வங்கியின் அனுமதிப்பத்திரமின்றி வைப்புத் தொகையை அறவிடுவது சட்டவிரோதமானது என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெம-36)

# தென்கிழக்கு பல்கலை ஊழியர்கள் போராட்டம்

(எம்.எப்.நவாஸ்)

"பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கூட்டாகப் போராடி, அதன்பயனாக கொளுத்த சம்பள அதி கரிப்புக்களையும் வரப்பிரசாதங்களையும் பெற்றுவிட்டு, கூட்டாகப் போராடிய ஏனைய ஊழியர்களை நட்டாற்றில் விட்டுவிட்டு, கைவிடப்பட்டவர்களின் நியாயமான கோரிக்கைகள் தொடர்பில் ஒரு வார்த்தையேனும் பேசாது, கல்விசார் அணியினர் வாய் மூடி மௌனிகளாக இருப்பது மிகுந்த வேதனையளிக்கிறது!" என்று தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் தலைவர் எம். ரி.எம். தாஜ/டீன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் எதிர்பார்க்கும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அதற்காக நீண்டகாலமாக போராடிவரும் நிலையில், அவர்களது போராட்டம் தற்போது தொடர் போராட்டமாக உரு வெடுத்துள்ளது.

குறித்தபோராட்டத்தின் ஏழாம் நாளான நேற்று தென்கிழக்கு பல்கலைக்கழக முன்றலில் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் செயலாளர் எம்.எம். முகம்மது காமிலின் வழிகாட்டலில் இடம்பெற்ற குறித்த போராட்டத்தின்போதே ஊழியர் சங்கத்தின் தலைவர் எம்.ரி.எம். தாஜ/டீன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



"நாங்கள் சொகுசுத் தேவைகளுக்காகப் போராடவில்லை. எங்களது போராட்டம் வாழ்வாதாரத்துக்கான போராட்டம். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலைவரங்களின் காரணமாக எங்களது ஊழியர்கள் தங்களது வாழ்வைக் கொண்டுசெல்ல மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஒரே நிறுவனத்தில் பணியாற்றும் ஒரு தரப்பினருக்கு சம்பள அதிகரிப்பை வழங்கிவிட்டு, எங்களுக்கு வாக்குறுதி தந்து, அரசு ஏமாற்றி வருகின்றது. எங்களது விடயத்தில் அரசு பாகுபாடாக நடந்துள்ளமை அப்பட்டமான உண்மை!" எனவும் அவர் தெரிவித்தார்.

"பல்கலைக்கழக கட்டமைப்பில் பட்டதாரிகளை உருவாக்குவதில் கல்விசாரா ஊழியர்களின் பங்கு என்பது பிரதானமான ஒன்று. இவ்வாறான சூழலில் மாணவர்கள் கூட கருத்து எதனையும் கூறவில்லை. பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்காது இருப்பதனூடாக அரசுக்கு அழுத்தங்களை மாணவர்களும் கல்விசார் தரப்பினரும் வழங்குவார்கள் என நாங்கள் எதிர்பார்க்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் கல்விசார் தரப்பினர் சூம் தொழிநுட்பத்தினூடாக தங்களது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது எங்களது போராட்டத்தை மலினப்படுத்தும் செயல்களில் ஒன்றாகவே நாங்கள் கருதுகிறோம். நாங்களும் பல்கலைக்கழக செயற்பாட்டுக்கு பங்களிப்பவர்கள் என்பதை குறித்த தரப்பினர் உணர்ந்துகொள்ள வேண்டும். அத்துடன் எங்களது கோரிக்கைகள் தொடர்பில் அரசுக்கு அனைவரும் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்!" என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

7 ஆம் திகதி தலைநகரில் பல்கலைக்கழக ஊழியர்களின் ஒன்றிணைந்த பாரிய போராட்டம் இடம்பெற்றிருந்த நிலையில், நேற்றைய போராட்டத்தில் - வாக்களிக்கப்பட்ட 107 வீத சம்பள அதிகரிப்பை வழங்கு, உறுதியளித்த 25 வீத எம்சிஏ கொடுப்பனவை வழங்கு!, என்பன போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

# பேராசிரியர் வித்தியானந்தனின் நூற்றாண்டு நினைவு யாழ் போதனா அருங்காட்சியகத்தில் திருவுருவப்படம்!

யாழ்ப்பாண பல்கலைககழகத்தின் முதலாவது துணைவேந்தரும் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பிதாமகருமான பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தனின் நூற்றாண்டு நினைவு தினத்தை முன்னிட்டு யாழ் போதனா வைத்தியசாலையின் அருங்காட்சியகத்தில் அவரது திருவுருவப்படம் நேற்று மாலை யாழ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி மற்றும் பேராசிரியர் வித்தியானந்தனின் பிள்ளைகளால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது

இந்நிகழ்வில் யாழ் போதனா வைத்திய சாலையின்பணிப்பாளர்த.சத்தியமூர்த்தி, அகில இலங்கை இந்து மா மன்றத்தின் உப தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன், யாழ் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம், யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடப் பீடாதிபதி இ.சுரேந்திரகுமரன், யாழ்பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள், யாழ் போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள், பணியாளர்கள், அன்னாரின் குடும்ப உறவுகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

1924-05-08 அன்று பிறந்த பேராசிரியர் எஸ்.வித்தியானந்தன் 1989-01-22 காலமானார்.












## காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்கு சவுதி தூதுவர் விஜயம்

(எம்.எம்.றம்ஸீன்)

சவுதி அரேபியத் தூதுவர் ஹாலித் ஹமூத் அல் கஹ்தானி காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்கு நேற்று விஜயம் செய்து சவுதியின் ஒளி – இலவச கண்புரை சத்திர சிகிச்சை முகாமைப் பார்வையிட்டார்.

சவுதி அரேபியத் தூதுவர் ஹாலித் ஹமூத் அல் கஹ்தானியை காத்தான்குடி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.எஸ்.எஸ்.எம்.ஜாபீர் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் வரவேற்றனர்.

இதன் போது வடமேல் மாகாண ஆளுநர் ஹாபீஸ் நஸீர் அஹமத், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசீம், சவூதி அரேபிய மன்னர் சல்மானின் நிவாரணம் மற்றும் மனிதாபிமானப் பணிகளுக்கான மன்னர் மையம் நிறுவனத்தின் பணிப்பாளர் கண் சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர் அப்துல் கரீம், கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் உட்பட அதிகாரிகள் பலரும் வருகை தந்திருந்தனர்.

சவுதி அரேபியத் தூதுவருக்குக் காத்தான்குடி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் டொக்டர் ஜாபீர் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவித்தார்.

கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்வதைத் தூதுவர் பார்வையிட்டதுடன் கண் புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வைத்தியசாலையில் தங்கியிருப்பவர்களையும் தூதுவர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

---

## மூதூர் மல்லிகைத்தீவு மகாவித்தியால பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(ஹஸ்பர் ஏ.எச்)

மூதூர், மல்லிகைத்தீவு மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிருவாகத் தெரிவும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

# நாட்டின் முன்னேற்றத்திற்கு பொது ......................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்தகைய ஆபத்தான சூழலிலே இந்தப் பணிகளை தோளில்ஏற்றுக்கொண்டேன். மூன்று காரணங்களுக்காகவே சவாலை ஏற்றுக்கொண்டேன். என்னிடம் ஒரு திட்டம் இருந்தது. அனுபவம் இருந்தது. சர்வதேச தொடர்புகள் இருந்தன. அதனால், நரகத்தில் விழுந்த இந்த நாட்டை மீட்க முடியும் என்ற நம்பிக்கையும் என்னிடம் இருந்தது. அந்த நம்பிக்கையுடன் நாட்டைக் குறுகிய காலத்தில் மீட்டெடுத்துள்ளேன்.

அப்போதிருந்து, நாங்கள் பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் மறுசீரமைப்புத் திட்டங்களை முறையாக செயற்படுத்த ஆரம்பித்தோம். இதன் பலனாக, 2023 ஆம் ஆண்டின் மத்தியில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டது.

இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி குறைந்தது மூன்று சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கின்றோம். பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் இதனை எதிர்வுகூறியுள்ளன. பணவீக்கம் தற்போது 1.5 சதவீதமாக குறைந்துள்ளது. பல ஆண்டுகளாக பற்றாக்குறையாக இருந்த முதன்மை கணக்கு கையிருப்பு, 2023 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.6 சதவீத உபரியாக மாற்றப்பட்டது.

பல தசாப்தங்களுக்குப் பிறகு, 2023 ஆம் ஆண்டில் நடப்புக் கணக்கில் ஒரு உபரி நிலுவைத்தொகை ஏற்பட்டது. வட்டி விகிதம் 10-13 சதவீதம் வரையில் குறைந்துள்ளது. சுற்றுலாத்துறை புத்துயிர் பெற்றுள்ளது. வெளிநாட்டுப் பணியாளர்கள் அதிகளவில் பணம் அனுப்புகிறார்கள். 2024 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் டொலரின் பெறுமதியை 300 ஷரூபாவை விடவும் குறைவாகக் கொண்டுவர முடிந்தது. அந்நியச் செலாவணி கையிருப்பு 5 பில்லியன் டொலர்களுக்கு மேல் அதிகரித்துள்ளது.

சவாலான, கடினமான, சரியான பாதையை நாங்கள் பின்பற்றியதால் இந்த நிலையை எங்களால் அடைய முடிந்தது. இந்நாட்டில் சிலர் நாங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் விமர்சித்தார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு முதல் நாட்டின் பொருளாதார ஒழுங்கமைப்புக்கான அனைத்துச் செயற்பாடுகளையும் விமர்சித்தனர். ஆனால், அந்த விமர்சனங்கள், அவதூறுகள், கட்டுக்கதைகள் என அனைத்துக்கும் மத்தியில் நாம் தொங்கு பாலத்தை கடக்க முயற்சித்தோம். அது மட்டுமே ஒரே வழியாகும் என்பதையும் நாம் உணர்ந்துகொண்டிருந்தோம்.

2023 செப்டெம்பர் முதல், படிப்படியாக முன்னேறினோம். பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பல்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளில் விலைச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அரசின் வருவாய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8 சதவீதமாக சரிவடைந்திருந்தது. அதனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20 சதவீதமாக காணப்பட்ட அரசின் செலவினங்களை நிர்வகிக்க வருவாய் போதுமானதாக இருக்கவில்லை. அதனால் அரசின் வருவாயை அதிகரித்த வேண்டிய கட்டாயம் காணப்பட்டது.

இதற்கு முன்பிருந்த சில அரசுகள், தொழில் வழங்கவும் சம்பளத்தை வழங்கவும், எரிபொருள், மின்சாரம், குடிநீர் சேவைகளைக் குறைந்த செலவில் வழங்கவும், வரவு - செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிவர்த்திக்கவும் வெளி நாடுகளிடம் கடன் பெற்றிருந்தனர். இல்லாவிட்டால் பணத்தை அச்சிட்டன. பல வருடங்களாக இதேமுறையில் பழகியிருந்ததால், நாம் ஏற்படுத்திய மாற்றத்தை தாங்கிக்கொள்வது கடினமாக இருந்தது.

ஆனால், நாட்டின் முன்னேற்றத்துக்கான மாற்றத்தை ஏற்படுத்த யாராவது முன்வர வேண்டியது அவசியம்.

தொடர் சீர்திருத்தங்கள் மூலம் நாட்டில் நிதி ஒழுக்கத்தை உறுதி செய்தோம். பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த அடுத்தபடியாக கடன் மறுசீரமைப்பைச் செய்ய வேண்டியிருந்தது.

2022 செப்டெம்பரில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கும் அதுவே காரணமாகும். 2022 டிசம்பரில் மொத்தக் கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 128 சதவீதமாக காணப்பட்டது. அது நல்ல நிலைமையாக தெரியவில்லை. அதனால், கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை செயற்படுத்தினோம். அதனை மூன்று கட்டங்களின் கீழ் செயற்படுத்தினோம்.

அதில் முதலாவதாக கடன் மறுசீரமைப்பு. அந்தப் பணி 2023 ஆம் ஆண்டில் நிறைவடைந்தன. இரண்டாவதாக, வெளிநாடுகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மூலம் உத்தியோகபூர்வமாக பெறப்பட்ட கடனை மறுசீரமைக்க வேண்டியிருந்தது. அந்த நாடுகளுடனான கலந்துரையாடலுக்குப் பின்பு, 2023 நவம்பருக்குள் இந்தக் கடன்களை மறுசீரமைப்பது குறித்து கொள்கை ரீதியான உடன்பாட்டை எட்ட முடிந்தது.

அதற்காக பாரிஸ் கிளப் மற்றும் அதில் இணையாத சீனா போன்ற நாடுகளும் இணக்கம் தெரிவித்தன. தற்போது கடன் வழங்கிய நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து அந்த பணிகளை நிறைவுக்கு கொண்டுவர வேண்டியது அவசியம்.

இலங்கை அரசு தற்போது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுடன் கலந்துரையாடுகின்றது. அதேபோல், சீன வங்கியுடனும் இந்தக் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மூன்றாவதாக வணிகக் கடன் மறுசீரமைபுச் செயற்பாடுகள் காணப்பட்டன. இலங்கை அரசின் சார்பில் பணிபுரியும் லாசார்ட் மற்றும் கிளிபோர்ட் சான்ஸ் ஆகிய ஆலோசனை நிறுவனங்கள் கடன் வழங்குநர்களுடன் பேச்சு நடத்தி வருகின்றன.

இரு தரப்பிலும் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் பேச்சு வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றது. இந்த வருடத்தின் மத்தியில் இந்த கலந்துரையாடல்கள் அனைத்தையும் நிறைவு செய்ய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். 2032 ஆம் ஆண்டுக்குள் மொத்தக் கடனை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 95 சதவீதமாகக் குறைப்பதே கடன் மறுசீரமைப்பின் இறுதி இலக்காகும். அரசின் மொத்த நிதித் தேவையை ஆண்டுதோறும் 13 சதவீதமாகவும், வெளிநாட்டுக் கடன் சேவையை வருடாந்தம் 4.5 சதவீதமாக பேணுவதும் அடுத்த இலக்காக உள்ளது.

கடன் நிலைத்தன்மையை அடைவதற்கான ஒரே வழி இதுதான். கடன் நிலைத்தன்மையை உறுதி செய்யாமல் நீண்ட கால அடிப்படையில் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவது சாத்தியமில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் நடத்தப்பட்ட அரச சோதனை அறிக்கையின்படி ஊழலுக்கு எதிரான திட்டத்தைச் செயற்படுத்த ஆரம்பித்திருக்கின்றோம்.

கடந்த இரண்டு வருடங்களாக நாம் நடைமுறைப்படுத்திய பொருளாதார மறுமலர்ச்சி வேலைத்திட்டத்தின் பெறுபேறுகள் மூலம் மக்களுக்கு நிவாரணம் வழங்க முடிந்திருக்கின்றது. அஸ்வெசும உள்ளிட்ட ஏனைய நிவாரணத் திட்டங்களின் கீழ் நாட்டில் உள்ள வறிய மக்களுக்கும் பெருமளவிலான நிதியை நேரடியாகக் கொண்டு சேர்க்க முடிந்தது. சிறுநீரக நோயாளிகள், முதியோர், ஊனமுற்றோர் ஆகிய தரப்பினருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் 2024 ஏப்ரல் முதல் 50 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் சமூர்த்தியை விட மூன்று மடங்கு அதிகமான பணம் வறிய மக்களைச் சென்றடைகின்றது. இந்த நிவாரணத் திட்டங்களுக்காக 2024 ஆம் ஆண்டில் 205 பில்லியன் ஷரூபா செலவிடப்படும். இரண்டாம் உலகப் போரின் பின்னரே இலங்கையில் முதன்முதலில் நிவாரணத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் இத்தகைய தொகை நிவாரணம் வழங்குவதற்காக செலவிடப்படவில்லை.

2022 ஆண்டு சிறுபோகத்திலும், 2022-2023 பெரும் போகத்திலும் , 2023 சிறு போகத்திலும், 2023-2024 பெரும் போகத்திலும் வெற்றிகரமான அறுவடையைப் பெற்றுக்கொண்டோம். அவற்றில் ஒரு பகுதியை இலவசமாக மக்களுக்கு பகிர்ந்தளிக்க அரசு எதிர்பார்த்தது.

அதன்படி கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் தமிழ், சிங்களப் புத்தாண்டுக் காலத்தில் வறிய மக்களுக்கு இலவச அரிசி வழங்கப்பட்டது. இனி வரும் காலங்களிலும் வறிய மக்களின் மேம்பாட்டுக்கான அனைத்து முயற்சிகளையும் அரசு முன்னெடுக்கும். 2024 ஆம் ஆண்டில் 12 பில்லியன் ஷரூபாவை செலவிட எதிர்பார்க்கப்படுகின்றது.

2024 ஜனவரி முதல் அரச ஊழியர்களுக்கு மாதாந்தம் 5000 ஷரூபா வாழ்வாதாரக் கொடுப்பனவாக வழங்கப்பட்டது. தற்போது 10,000 ஷரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் முதல் ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்கு 2,500 ஷரூபா கொடுப்பனவும் வழங்கப்பட்டது.

வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடும்போது இது போதுமானதாக இல்லை. இருப்பினும் அரசால் இயன்ற அளவில் இந்த நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ரூபாயின் பெறுமதி அதிகரித்திருப்பதால், கடந்த சில மாதங்களில் இறக்குமதி பொருட்களின் விலையும் கணிசமாகக் குறைந்துள்ளது. அதனால் எரிவாயு, கனிய எண்ணெய் , பால்மா போன்றவற்றின் விலைகளும் குறைந்தன. மேலும், வட்டி வீதம் குறைவதால் தொழில் துறையினருக்கும் நிவாரணம் கிடைக்கும்.

2024 ஆம் ஆண்டிலும் சம்பள அதிகரிப்பு தொடர்பிலான கோரிக்கைகள் வந்தாலும் அரசின் வருமானம் அதற்குத் தகுந்த வகையில் அதிகரிப்பைக் காட்டவில்லை. கடந்த காலங்களில் பொறுப்பற்ற முறையில் வழங்கப்பட்ட பல்வேறு சலுகைகள் எமது பொருளாதாரத்தையும் மக்களின் வாழ்க்கையையும் அழித்தது. அனைத்துப் பிரிவு மக்களும் கடந்த இரண்டு வருடங்களாக மிகவும் கடினமான பாதையில் பயணிக்கின்றனர்.

2024 ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சியை கவனத்தில் கொண்டு சம்பளத் திருத்தம் குறித்து தீர்மானிக்க முடியும்.

இப்போது செயற்படுத்தப்படும் பொருளாதாரத் திட்டங்களை கைவிட்டால் மீண்டும் பெரும் நெருக்கடியைச் சந்திக்க நேரிடும். 2022 செப்டெம்பர் முதல் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் மூலம் பல சாதகமான பலன்களை அடைந்துள்ளோம்.

பெரும்பாலும் வெளிநாட்டு பரிவர்த்தனைகளைச் சார்ந்து இருக்கும் சிறிய பொருளாதாரம் என்பதால், நாம் ஏற்றுமதியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். மேலும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் வகையில் பசுமைப் பொருளாதாரம் குறித்து கவனம் செலுத்த வேண்டும். தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட புதிய தொழிநுட்ப அம்சங்களை பொருளாதார செயற்பாடுகளில் இணைத்துக்கொள்ள வேண்டும்.

அவ்வாறின்றி, ஒரு பொருளாதாரத்தை நீண்ட காலத்திற்கு நிலைநிறுத்த முடியாது. பொருளாதாரச் சீர்திருத்தங்களின் பலன்களை சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் முறையாகப் பகிர்ந்தளிப்பதை மையமாகக் கொண்ட சமூக-சந்தை பொருளாதார அடித்தளத்தை நாம் நிறுவ வேண்டும்.

நமது பொருளாதார வலிமையை அதிகரிக்க, விரைவான பொருளாதார வளர்ச்சிப் பாதையில் நாம் பயணிக்க வேண்டும். உயர் பொருளாதார வளர்ச்சியால், நமது கடன் சுமை குறையும். அதுமட்டுமின்றி வாழ்க்கைச் செலவும் குறையும்.

தொடர்ந்தும் மக்கள் மீது சுமையேற்றும், நட்டத்தில் இயங்கும் அரச தொழில்முயற்சிகளை எமது பொருளாதாரத்தால் முன்னெடுக்க முடியவில்லை. இதற்கான மாற்றுத் திட்டமொன்றை அரசு முன்மொழிந்துள்ளது.

தனியார் துறையின் பங்களிப்பின் மூலம் அரச நிறுவனங்களை வெற்றிகரமாக நடத்த முடியுமென்றால், மக்கள் மீது வரிச் சுமையை ஏற்றி, நட்டத்தை ஏற்படுத்தும் அரச தொழில்முயற்சிகளை அப்படியே தொடரக்கூடாது.

நாட்டில் பெருமளவிலான காணிகள் முறையாகப் பயன்படுத்தப்படாமல் மக்களுக்குச் சுமையேற்றும் வகையில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. கடந்த காலங்களில், அந்த காணிகளில் தனியார் துறையால் வெற்றிகரமான விவசாய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அந்தத் திட்டங்ளின் மூலம் அன்றிருந்த அரசாங்கங்கள் அதிக வருமானம் பெற்றன. அந்தச் செயற்பாடுகளின் மூலம் நாட்டுக்கு அதிக அந்நியச் செலாவணியும் கிடைத்தது.

எனவே, வர்த்தக ரீதியில் செயற்படும் ஏற்றுமதியில் கவனம் செலுத்தும் உள்நாட்டு தனியார் துறையின் பங்களிப்புடன் வர்த்தக ஏற்றுமதி விவசாயப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கையை எடுத்துள்ளோம்.

1930களின் பின்னர் சுமார் 20 இலட்சம் விவசாயக் குடும்பங்களுக்கு அவர்களது காணி உரிமையை வழங்கும் ‘உறுமய’ வேலைத்திட்டம் மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டம் அவர்களுக்கு காணியின் முழு உரிமையையும் வழங்குகிறது. இத்திட்டத்தின் அடிப்படையில் இலங்கை முழுவதும் ஆயிரக்கணக்கான விவசாய வர்த்தகர்கள் உருவாவதைத் தடுக்க முடியாது.

மேலும், தற்போதுள்ள விவசாய நிலங்களில் இருந்து உச்ச அளவில் பயனைப் பெற்றுக்கொள்வது அவசியம். அதன்படி, விவசாய உற்பத்தியை மேம்படுத்தும் அடிப்படையில் விவசாய நவீனமயமாக்கல் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் விவசாயிகளை வலுப்படுத்துவது இந்தத் திட்டத்தின் ஒரு நோக்கமாகும்.

தற்போது 26 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அடுத்த சில மாதங்களில் மேலும் 75 பிரதேச செயலகப் பிரிவுகளில் இந்த வேலைத்திட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தில் மிகவும் வலுவான துறையாக இருந்த பல்வேறு சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் செயலிழந்தன. அந்த வணிக நிறுவனங்கள் மூடப்பட்டன. அவற்றை மீட்டெடுப்பதற்கான திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்காக பாரிய அளவில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. பல்வேறு கடன் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பராட்டே சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்ட குறுகிய காலத்திற்குள் இத்துறைக்கு மேலும் ஒரு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. திறைசேரியில் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான விசேட பிரிவும் நிறுவப்பட்டு செயல்பாடுகள் ஒருங்கிணைக்கப்படுகின்றது.

சுற்றுலாத்துறை வேகமாக வளர்ந்து வரும் தொழிற்துறையாக மாறியுள்ளது. 2023 ஆம் ஆண்டின்

(9ஆம் பக்கம் பார்க்க..)

# நாட்டின் முன்னேற்றத்திற்கு பொது ......................

(8ஆம் பகக்த் தொடர்ச்சி...)

முதல் 4 மாதங்களுடன் ஒப்பிடும்போது, 2024 ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் 75 வீதத்திற்கும் அதிகமான வளர்ச்சி காணப்படுகின்றது. இந்த வருடத்தில் இதுவரை சுமார் 8 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். சுற்றுலாத்துறைக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான விரிவான திட்டத்தைச் செயற்டுத்துவதில் அரசும் தனியார் துறைகளும் ஈடுபட்டுள்ளன.

நமது வெளிநாட்டு முதலீட்டுத்துறையை வலுப்படுத்துவது நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சியின் இன்றியமையாத பகுதியாகும். நம் நாட்டிலிருந்து பெற்றுக்கொள்ளகக்கூடிய முதலீடுகள் குறைவாக இருப்பதால், வெளிநாட்டு முதலீடுகள் நாட்டிற்குள் வர முறையான சட்டங்களும் நவீன நிறுவன கட்டமைப்பும் அவசியம். அந்த நோக்கத்திற்காக, தற்போதுள்ள பல நிறுவனங்களை இணைத்து புதிய பொருளாதார ஆணைக்குழுவை நிறுவுவது எமது எதிர்பார்ப்பாகும்.

மேலும், முதலீட்டுக்கான பழைய சட்டங்களுக்குப் பதிலாக புதிய ஒருங்கிணைந்த சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டில் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு நவீனமயப்படுத்த வேண்டிய பல்வேறு துறைகள் உள்ளன.

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, தொழில் பயிற்சிக் கல்வி, நகர அபிவிருத்தி, பாதுகாப்புத் துறை, தகவல் தொழில்நுட்பம், வெளிநாட்டு உறவுகள், விநியோகச் சங்கிலிகள், ஏற்றுமதித் தொழில்துறை, தொழிற் படை போன்றவை இவற்றில் அடங்கும். மின்சாரத் துறையின் முழுமையான வளர்ச்சியை இலக்காகக் கொண்டு மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அணுகுமுறை எடுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நடவடிக்கைகளின் அடிப்படையில் எமது வெளிநாட்டு உறவுகள் வலையமைப்பை தொடர எதிர்பார்க்கின்றோம். வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்குள் சர்வதேச வர்த்தக நிறுவனம் ஒன்றை நிறுவுவது தொடர்பான ஆரம்பகட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கான புதிய சட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பொருளாதார சீர்திருத்தங்களை நோக்கமாகக் கொண்டு கடந்த இரண்டு ஆண்டுகளில் 30 இற்கும் மேற்பட்ட புதிய சட்டங்கள் மற்றும் சட்டத்திருத்தங்கள் இந்த நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், இது போன்ற பல சட்டமூலங்களை விரைவில் இந்த நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்க்கின்றோம்.

பொருளாதார பரிவர்த்தனை சட்ட மூலம், அரச நிதி சட்டமூலம் மற்றும் அரச கடன் முகாமைத்துவ சட்டமூலம் ஆகியவை அவற்றில் முக்கியமானவை.

பொருளாதாரப்பரிவர்த்தனை சட்டமூலமானது இலங்கைப் பொருளாதார ஆணைக்குழு, முதலீட்டு உட்கட்டமைப்பு வசதிகள் கூட்டுத்தாபனம், சர்வதேச வர்த்தக நிறுவனம், தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழு, இலங்கை பொருளாதார மற்றும் வர்த்தக நிறுவனம் ஆகியவற்றை உள்ளடக்கியது. பொருளாதார பரிவர்த்தனை சட்டம், நீண்ட காலத்திற்கு அரசாங்கம் பின்பற்ற வேண்டிய பல நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது.

எதிர்காலத்தில் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும், இந்தப் பொருளாதாரத்தை மீண்டும் அதலபாதாளத்திற்கு இழுத்துச் செல்லாமல் இருக்க இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் தொடரப்பட வேண்டும். எமது நாடு எதிர்நோக்கும் நெருக்கடியைத் தீர்ப்பதற்கும், நாட்டை மீண்டும் இவ்வாறான அவலத்தில் தள்ளாமல் இருப்பதற்கும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நீண்டகால மற்றும் தொடர்ச்சியான வேலைத்திட்டம் அவசியம் என்பதை நான் தொடர்ந்தும் கூறி வந்தேன். நாங்கள் இதுவரை மேற்கொண்ட பொருளாதார சீர்திருத்தங்களுக்கு எதிர்க்கட்சிகள் விமர்சன ரீதியிலான ஆதரவை அளித்துள்ளன.

மறுசீரமைப்பு செயல்முறையைத் தொடர எதிர்காலத்தில் அத்தகைய ஆதரவு தேவை. பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் கடந்த இரண்டு வருடங்களாக அரசு நடைமுறைப்படுத்திய பொருளாதார சீர்திருத்தத் திட்டத்திற்கு மக்கள் ஆதரவளித்துள்ளனர்.

எரிந்து கொண்டிருந்த பொருளாதாரத்தில் இருந்து நிலையான பொருளாதாரத்தை நோக்கிய இந்தப்பயணத்தில் அடைந்த முன்னேற்றத்தால், நாடு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட முன்னேற்றமடைந்துள்ளது. இந்த முன்னேற்றத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாத சில குழுக்கள் நாம் நரகத்தில் ஒரு இடைவேளையைக் கடந்து கொண்டிருக்கிறோம் என்று கேலி செய்கின்றனர்.

ஆம், நாங்கள் பொருளாதார நரகத்தில் இருந்தோம். இப்போது நாம் முறையான திட்டமிடல் மூலம் இந்த நரகத்திலிருந்து வெளியே வருகின்றோம். ஆனால், தொலைநோக்குப் பார்வை இல்லாமல் குறுகிய கால மற்றும் குறுகிய எதிர்பார்ப்புகளை இலக்காகக் கொண்டு தற்போதைய பயணப் பாதையை மாற்றினால், நாம் மீண்டும் நரகத்துக்குள் தள்ளப்படுவோம். அது நடந்தால், நாம் அனைவரும் நீண்ட காலம் நீடிக்கும் மிகவும் துயர்மிகு காலத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

இதுவரை நாம் முன்னெடுத்த வேலைத்திட்டம் வெற்றியடைவதாக எதிர்தரப்பு அரசியல் குழுக்கள் நாளுக்கு நாள் உறுதிப்படுத்திக்கொண்டிருப்பது நல்ல விடயம். புத்தாண்டின் போது, கூட்டுறவு விற்பனை நிலையங்களில் மக்கள் அதிகமாக திரண்டிருக்கும் படங்களை வெளியிட்டு, கூட்டுறவு சங்கங்களின் வருமானம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக சமூக வலைதளங்களில் வெளியிடப்பட்ட கருத்துக்களைப் பார்த்தோம்.

சில அரசியல் நோக்கங்களுக்காக அந்தப் படங்களும் கருத்துக்களும் பதிவிடப்பட்டன. ஆனால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட, மக்கள் நல்ல நிலையில் இருக்கிறார்கள் என்பதையே அது பிரதிபலிக்கின்றது. இதேவே உண்மையாகும். முன்பை விட சற்றேனும் வளமாக உள்ளோம் என்பதையே இது காட்டுகிறது.

இந்த நாட்டிற்கான சவாலான பணியை நான் பொறுப்பேற்றபோது, நான் ஒரு தொங்கு பாலத்தில் நடக்க வேண்டியிருந்தது என்று குறிப்பிட்டேன். அன்றைய காலக்கட்டத்தில் அதைப் பொருட்படுத்தாதவர்களும் இன்று அதை ஒப்புக்கொள்கின்றார்கள். தொங்கு பாலத்தைத் தவிர வேறு வழியில்லை என்பதையே இது காட்டுகின்றது. இதைத் தவிர வேறு வழியில்லை என்றும் இன்று கூறுகின்றார்கள்.

நமது பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேறு வழியில்லை என்பதை மீண்டும் கூறுகின்றேன். இந்த வழியைத் தவிர வேறு எந்த மாற்றுவழியும் இல்லை. இந்தத் திட்டத்தைத் தவிர வேறு எந்தத் திட்டமும் இல்லை. அதனால்தான், இந்தப் பொருளாதாரச் சீர்திருத்தத் திட்டத்தில் பொதுவான உடன்பாடு மற்றும் பொதுவான ஒருமித்த கருத்து தேவை என்று நான் எப்போதும் கூறுகின்றேன்.

அந்த ஒருமித்த கருத்தை இந்த சபையில் உள்ள மக்கள் பிரதிநிதிகள் மட்டுமன்றி, மதத் தலைவர்கள், தொழிற்சங்கங்கள், தொழில் வல்லுநர்கள், வர்த்தக சமூகம், அரச சாரா நிறுவனங்கள், பல்வேறு கருத்துக்களைக் கொண்ட தலைவர்கள், சமூகத்தில் செல்வாக்கு செலுத்தக்கூடியவர்கள் என அனைவரும் இந்த பொதுவான ஒருமித்த இணக்கப்பாட்டில் இணைய வேண்டும். உடன்பாடு மற்றும் ஒருமித்த கருத்துடன் முன்னேறினால், உலகில் அபிவிருத்தி அடைந்த நாடாக விரைவில் முன்னேற முடியும்.

அப்படியில்லாமல், இந்த இக்கட்டான நேரத்தில் நாட்டை விட்டு, தமது நலன்களை முன்னிறுத்தி செயற்பட்டால் அந்தப் பயணம் பெரும் அழிவின் தொடக்கமாக அமையலாம். அந்த ஆபத்துக்களை உணர்ந்து நாட்டின் நலனுக்காக நீங்கள் அனைவரும் பொதுவான உடன்பாட்டையும் ஒருமித்த கருத்தையும் எட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம். நாட்டை மீட்டெடுக்க நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு எதோ ஒரு வகையில் பங்களிப்பதற்கான இந்த வாய்ப்பைத் தவறவிடாதீர்கள். அனைவரும் சேர்ந்து இந்த மலர்த்தட்டில் கைவைப்போம். இன்று நாம் எவ்வாறு செயல்படுகின்றோம் என்பதை வைத்தே எமது எதிர்காலம் தீர்மானிக்கப்படுகின்றது.

நாட்டுக்குத் துரோகம் செய்தவர்கள் என்று முத்திரை குத்திக்கொள்ளப் போகின்றோமா? அல்லது நாட்டை நேசித்த குழுவாக அடையாளப்படுத்தப்படுவோமா? அதுதான் இன்று நாம் எடுக்க வேண்டிய முடிவாகும்." - என்றார்.

# முல்லைத்தீவு மாவட்ட விசுவமடு மேட்டுப்பட்டி தெரு கிராமத்தில் யானைகள் அட்டகாசம்!

*முல்லைத்தீவு மாவட்ட விசுவமடு மேட்டுப்பட்டி தெரு கிராமத்தில் விவசாயி ஒருவரின் பயிர்களை யானைகள் புகுந்து சேதம் விளைவித்துள்ளன.*

*குறித்த சம்பவம் நேற்று (8) நள்ளிரவு வேளை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 3 யானைகள் தமது தோட்டத்தில் உட்புகுந்து அறுவடை செய்யும் தறுவாயில் இருந்த வத்தகப்பழங்கள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட வாழை மரங்கள் என்பனவற்றை சேதமாக்கியுள்ளதென அந்த விவசாயி கவலை தெரிவித்துள்ளார். மேலும் குறித்த கிராமத்தில் நீண்டகாலமாக யானைகள் தமது வாழ்வாதாரங்களை அழித்து வருவதாகவும், யானை வேலிகள் போடப்பட்டு வேலைகள் பூர்த்தியாகாத நிலையில் உள்ளதாகவும் தற்பொழுது ஏற்பட்டுள்ள அதிக வெப்பநிலை காரணமாக அதிகளவில் விற்பனை செய்யக்கூடிய வத்தகப்பழத் தோட்டம் அறுவடை செய்து விற்பனை செய்யும் நேரத்தில் சேதமடைந்தமை மிகுந்த வேதனை அளிக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார். (02)*






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.05.2024இல் வெளியிடப்பெற்றது.